(5) அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(ஆ) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு பொது விற்பனை வரி (நான்காவது திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே,

"1971-ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (நான்காவது திருத்த) சட்ட முன்வடிவை * இம்மன்றம் அறிமுகம் செய்து, ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளவேண்டும்" என்று நான் முன்மொழிகிறேன்.

தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் முதல் விவர அட்டவணையின்கீழ், கள், சாராயம் நீங்கலாக பொது மக்கள் அருந்தும் எல்லா மதுபான வகைகளும் முன்னர், இம் மாநிலத்தில் முதல் விற்பனை நிலையில் 12 சதவீத ஒரு முனை வரி விதிக்கப்படுவதற்கு உட்பட்டவையாக இருந்தன. இம் மாநிலத்தில் மதுவிலக்கை நிறுத்தி வைக்க முடிவு செய்ததை அடுத்து, இம்மாநிலத்தில், 1—8—1971-ஆம் நாள் முதல் சாராயத்துக்கு முதல் விற்பனை நிலையில் 6 சதவீத ஒரு முனை வரி விதித்து வசூலிப்பதென்று அரசு முடிவு செய்துள்ளது. தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் 59-வது பிரிவு (1) உட்பிரிவின்கீழ் பிறப்பித்த ஓர் அறிவிப்பின் மூலம் இது செயற்படுத்தப்பட்டது.

தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் 59-வது பிரிவு (2) உட்பிரிவின்கீழ் மேற் சொன்ன அறிவிப்புக்குப் பதிலாக நடப்புச் சட்டமன்றக் கூட்டத்தொடரில் ஒரு மசோதாவைக் கொண்டுவர வேண்டியுள்ளது. எனவே, இந்த மசோதா பேரவையின் ஆலோசனைக்காக வைக்கப் படுகிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சருடைய தீர்மானம் பேரவையின் முன் விவாதத்திற்கு வைக்கப்பட்டிருக்கிறது.

பேரவையின் அலுவல் நேரம், பேரவையின் அனுமதியுடன், நீட்டிக்கப் படுகிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி: சார், இந்த விற்பனை வரி திருத்த மசோதாவில்', ஆல் கைண்ட்ஸ் ஆப் ஆல்கஹாலிக் லிக்கர்ஸ்' என்று சொல்லி, அதற்கு 12 சதவீதம் வரி போட்டிருக்கிறார்கள். இந்தத் திருத்தத்தில் ஒரு புது யோசனையைச் சொல்ல விரும்புகிறேன். இதில் கள்ளை ஏன் சேர்க்கவில்லை என்று தெரியவில்லை. லிக்கருடன், டாடியையும் சேர்த்துக் கொள்ள வேண்டியது தானே ? கள்ளை ஏழைகள் சாப்பிடுகிறார்கள். ஆகவே, போடவில்லை என்று சொல்லலாம். ஆனால், உணவுப் பொருட்களுக்கெல்லாம் கூட வரி போட்டிருக்கிறீர்கள். ஜெனரல் சேல்ஸ் டாக்ஸ் ஆக்டில் 'ஃபுட்ஸ்டஃப்ஸ்' களுக்கு வரி போடப்பட்டிருக்கிறது. வரி எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. எடுத்திருந்தால் சொல்லுங்கள். எடுக்கவில்லை. எனக்கு நன்றாகத் தெரியும். உணவுப் பொருட்களின் மீதான வரியை எடுக்காத அரசு கள்ளின் மேல் ஏன்

---

* . . . தேதிய தமிழ் நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

1971 அக்டோபர் 25] [திருமதி த. ந. அனந்தநாயகி]

கருணை காட்ட வேண்டும் என்று எனக்குப் புரியவில்லை. எங்கள் ஸ்தாபனம் கள் குடிக்கக் கூடாது என்று கண்டித்துச் சொல்கிறது. எனவே, அதற்கு விற்பனை வரி இல்லை என்று சொல்வது ஆச்சரியமாக இருக்கிறது. எங்கே பணம், எங்கே பணம் என்று ஏங்கிக் கொண்டிருகிற அரசு, எங்கே வரி போட்டு வாங்கலாம் என்று சொல்கிற அரசாங்கம் குடிக்கிறவர்கள் மீது என்ன கருணையோ, தெரியவில்லை. எனவே, கட்டாயம், கள்ளின் மீது வரி போட வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கூற விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, கள் மீது வரி போடு வது பற்றி அம்மையார் ரொம்ப அக்கறையோடு யோசனை சொன்னார்கள். யோசனைக்கு நன்றி, இது ஏற்கெனவே, அரசின் பரிசிலனையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். 6 சதம் ஒரு முனை வரி விதிப்பது என்ற இந்த மசோதாவை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன்.

The Government motion was put and carried and the Bill was taken into consideration, clause by clause.

MR. SPEAKER: There are no amendments to the Clauses.

Clause 2, was put and carried.

Clause 1, the Enacting Formula and the Long Title were put and carried.

THE HON. THIRU P. U. SHANMUGAM: Sir, I move—

"That the General Sales Tax (Fourth Amendment) Bill, 1971, be passed."

The motion was put and carried and the Bill was passed into Law.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் அலுவல்கள் இத்துடன் முடி கின்றன. வரும் நவம்பர் திங்கள் 15-ஆம் தேதி திங்கட்கிழமை அன்று காலை 10 மணியளவில் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை ஒற்றி வைக்கப்பட்டது.

7. பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. Statutory Rules and Orders.

* 52. Notification issued with G.O. Ms. No. 1731, Agriculture, dated the 8th June 1971, in regard to certain amendments issued under section 5 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act relating to application of additional notified crops to all the Regulated Markets in Thanjavur district. [Laid on the Table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]